# காலம் கொண்டாடும் கவிஞன்…

வானவில் பண்பாட்டு மையத்துடன் இணைந்த முத்தமிழ்ப் பேரவை 2019, டிசம்பர், 03-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் மகாகவி பாரதியார் பிறந்தநாளையொட்டி பாரதி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் இசைக்கப்பட்ட நிகழ்ச்சியில் மகாகவியின் பாடல்களை நாட்டுப்புற மெட்டிலும் பாடி மாணவிகள் அசத்தினர். மனதில் உறுதி வேண்டும் என்ற பாடலுக்கான தேஜா பார்கவியின் நடனம் நிகழ்ச்சிக்குக் கூடுதல் சிறப்பு சேர்த்தது.

சிறப்பு அழைப்பாளர்களாக வந்திருந்த வழக்கறிஞர் சதீஷ் குமாரும், பொதிகை தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் திருமதி சாந்தி ஜெகத்ரட்சகனும் பாரதியாராகத் தோன்றிய மாணவன் யதீந்தரை மனம் திறந்து பாராட்டினர்.

மனித மனங்களைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களிடம் பாரதியைச் சேர்ப்பதுதான் பொருத்தம் என்று தொடங்கினார் வழக்கறிஞர். மேலும், காலத்தால் கொன்று முடிக்க முடியாத புரட்சியாளன் முண்டாசுக் கவிஞன் என்றும், சாதிய ஏற்றத் தாழ்வுகளைக் களைய வந்த எழு ஞாயிறு என்றும், நாட்டிற்கு உழைக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்த பேராசான் என்றும் பேசிய அவர் நிகழ்ச்சியில் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளின் பேராசிரியர்கள் வந்திருந்ததைக் குறிப்பிட்டு இம்மூன்று மொழிகளிலும் மகாகவியின் புலமையை நினைவு கூர்ந்தார்.

‘பைந்தமிழ்த் தேர்ப்பாகன்’ என்று பாவேந்தர் பாரதியைப் போற்றும் வரிகளுடன் தொடங்கிய திருமதி சாந்தி வானவில் பண்பாட்டு மையம் ஆண்டுதோறும் பாரதி விழாவில் நிகழ்த்தும் ஜதி பல்லக்கு, பொற்கிழி வழங்குதல், கவியரங்கம் நடத்துதல் போன்ற பலவற்றையும் பதிவு செய்து மாணவர்களைத் தேசியக்கவியின் பால் கவர்ந்திழுத்தார்.